மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : CC 12/2022

பெயர் : காளியப்பன்(PW1)

த/பெ. க/பெ : வெள்ளைச்சாமி

(Accused Periasamy is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of November 2023

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** ( மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை)( சாட்சிக்கு அவரது முதல் விசாரணை படித்துக் காண்பிக்கப்பட்டது)

1) வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் எனக்கு கிடையாது. இந்த வழக்கு சம்மந்தமாக ஓட்டப்பிடாரம் போலிசார் என்னை விசாரிக்கும்போது ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்று என்னிடம் கேட்டார்களா என்றால் கேட்டார்கள்.நான் ஓட்டுனர் உரிமம் இல்லை என்று சொல்லிவிட்டேன்.

2) ஓட்டுனர் உரிமம் இல்லாத காரணத்தால் 4 சக்கர வாகனமோ, இருசக்கர வாகனமோ ஓட்டத்தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு முன்பு வழக்கை புலனாய்வு செய்த ஓட்டப்பிடாரம் போலிசார் 5,6 நபர்களை காண்பித்து அடையாள அணிவகுப்பு நடத்தினார்களா என்றால் இல்லை.

3) நான் கிழக்கில் இருந்து மேற்காக செல்லும்போது மேற்கில் இருந்து கிழக்காக வந்த என்.டி.ஆர் பஸ் நின்றுகொண்டிருந்தது. அதில் ஆட்கள் நிறைய இருந்தார்கள்.அந்த பேருந்தில் உள்ள நபர்கள் அனைவருக்கும் இந்த விபத்தினை பற்றி நன்கு தெரியும்.

4) நான் கிழக்கில் இருந்து மேற்காக செல்லும் போது மேற்கில் இருந்து கிழக்காக வந்த என்.டி.ஆர் பஸ் நின்றுகொண்டிருந்தது என்ற விபரத்தை நான் என்னுடைய புகாரிலும் போலிசார் விசாரணையிலும் தெரிவித்துள்ளேனா என்றால் ஆமாம். நான் கிழக்கில் இருந்து வரும்போது எனது இடது பக்கம் தென்புறம் என்றால் சரிதான். வலது பக்கம் வடபுறம் என்றால் சரிதான்.

5) ஒரு வேளை பின்னால் வந்து இடித்தால் நான் எந்த பக்கம் விழுவேன் என்றால் தென்புறத்தில் விழுவேன். இந்த விபத்தில் நான் எந்த பக்கம் விழுந்தேன் என்றால் நான் தென்புறத்திலும் என் மனைவி மற்றும் மகன் வலதுபுறத்தில் விழுந்தனர். ஒரு வேளை நாங்கள் இடது பக்கம் விழுந்தால் வண்டி எங்கள் மீது ஏறி இருக்காது என்றால் சரிதான்.

6) எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் கையொப்பம் மட்டும் செய்வேன். எனக்கு வாசிக்க தெரியாது. என்னிடம் காட்டப்படும் அசா ஆ 1ல் இருப்பது என்னுடைய கையொப்பம் தான் .அதில் இருக்கும் விபரங்கள் நான் சொல்லி எழுதியதுதான். அசா ஆ 1ல் எனது மனைவியும் மகனும் அரசு பேருந்தில் இடது புறத்தில் விழுந்துவிட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) நாங்கள் கீழே விழுந்தவுடன் நானோ வேறு நபர்களோ ஓட்டப்பிடாரம் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லப்பட்டதா என்றால் அங்கிருந்த நபர்கள் தகவல் சொன்னார்கள் .அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அங்கு போலிசார் வந்தார்கள். எத்தனை பேர் வந்தார்கள் என்றால் 4,5 பேர் வந்தார்கள். காவல் ஆய்வாளர் வந்தார். போலிசார் என்னிடம் என்ன நடந்தது என்று விசாரித்தார்களா என்றால் ஆமாம்.

8) நான் அவர்களிடம் நடந்த சம்பவத்தை சொன்னேன் அவர்கள் எழுதிகொண்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். அசா ஆ 1ல் வாய்மொழியாக நான் கொடுத்த புகார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகார் தான் இது என்றாலும் எழுத்து பூர்வமாக கொடுத்த புகார் கிடையாது என்றால் சரிதான்.

9) என் வாகனத்தை அடையாளம் தெரியாத ஏதோ ஒரு வாகனம் இடித்துவிட்டது என்றால் சரியல்ல, பேருந்து தான் இடித்தது. நான் சம்பவ இடத்தில் வைத்து அடையாளம் தெரியாத வாகனம் இடித்ததாக தான் தகவல் தெரிவித்தேன் என்றாலும் பின்னர் காவல்நிலையம் வந்து வாகனத்தின் எண் குறிப்பிட்டு புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் எதிரியை பற்றிய எந்த விபரமும் குறிப்பிடவில்லை என்றால் நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள் நான் படித்து பார்க்கவில்லை.

10) எனக்கு எழுத படிக்க தெரியாது என்பதால் புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரியை வழக்கிற்கு முன்பாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.சம்பவத்திற்கு முன்பாக எதிரி என் வீட்டிற்கு வந்ததும் கிடையாது நான் எதிரியின் வீட்டிற்கு சென்றதும் கிடையாது. சம்பவம் நடந்தவுடன் ஊரே கூடிவிட்டது அதில் 200 நபர்கள் இருந்திருப்பார்கள்.

11) அவர்கள் அனைவரும் சண்முகபுரத்து ஊர்காரர்களும் இருந்தார்கள் வெளியூர்காரர்களும் இருந்தார்கள். எந்த மருத்துவரிடம் என் மகன் ஆகாஷ்ராஜிற்கு சிகிச்சைக்கு சென்றோம் என்றால் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றோம் அந்த மருத்துவ நோட்டு தற்போது வீட்டில் உள்ளது. போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கும்போது ஏன் வண்டியில் சென்றோம் என்று விசாரித்தார்களா என்றால் ஆமாம். அப்போது நான் சிகிச்சைக்காக சென்ற விபரத்தை சொல்லியபோது போலிசார் அதன் விபரம் மற்றும் மருத்துவ நோட்டினை கேட்டார்களா என்றால் இல்லை.

12) எங்களை இடித்த அரசு பேருந்தில் பயணிகள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 100 பேர்கள் . பேருந்தில் இருந்த 100 பேருக்கும் இந்த சம்பவம் தெரியும். சம்பவம் நடந்த இடம் கிழமேல் ரோட்டில் பஸ்டாப் தென்புறத்தில் உள்ளது. பஸ்டாப்பிற்கு வடபுறத்தில் 20 அடி கிழமேல் ரோடு உள்ளது என்றால் சரிதான். பஸ்டாப்பிற்கு கிழக்கு புறத்தில் வேல்பாண்டி மற்றும் ராஜீ ஆகியோர்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். அவர்களுக்கும் விபத்து சம்பவத்தை பற்றி தெரியும்.

13) பஸ்டாண்டிற்கும் எங்களை முதல் முதலாக பஸ் இடித்த இடத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் 300 மீட்டர். நான் மேற்கு நோக்கி சென்றுகொண்டிருந்ததால் நான் வண்டியை ஓட்டும் போது மேற்கு பக்கம் தான் பார்த்து சென்றுகொண்டிருந்தேன் என்றால் சரிதான். நான் மேற்கு பக்கம் பார்த்து சென்றுகொண்டிருந்ததால் எனக்கு கிழக்கு பக்கத்தில் வாகனம் வருகிறதா என்று எனக்கு தெரியாது என்றால் நான் சைடு கண்ணாடியை பார்த்து வாகனத்தை செலுத்தியதால் எனக்கு தெரியும்.

14) எனக்கு ஓட்டுனர் உரிமம் கிடையாது என்றாலும் அதனால் நான் தான் அஜாக்கிரதையாக ஓட்டு விபத்து ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல . வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் அவர் நிதானமாகத்தான்

வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லாத நிலையில் நான் இருவரை வாகனத்தில் அழைத்து சென்றது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் போலிசார் ஆலோசனைப்படி பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.